Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 13, 2022

வியாழக்கிழமை ஒக்டோபர் 13, 2022 | ஒளி: 08 கதிர் 120 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## வறுமைக்கோட்டின் கீழ் 96 இலட்சம் குடும்பங்கள்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில், இலங்கையில் வாழும் மக்கள் தொகையில் 42 சதவீதமானோர் ( 96 இலட்சம் குடும்பங்கள்) இப்போதும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்த மக்கள் தொகையில் அரைவாசிக்கு அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நிலைமை ஏற்படும் எனவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை சார் பேராசிரியர்கள் குழுவின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



புதிய வரித் திருத்தம்

# மரண அடி

### பிரதான எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

பா.நிரோஸ்

புதிய வரித்திருத்தங்களை முன்வைத்து சிறிய, நடுத்த தொழிலாளர்கள், தேசிய வர்த்தகத்துறையினர், முதலீட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பலருக்கு அரசாங்கம் மரண அடியை வழங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சுமத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

உள்நாட்டு இறைவரி திருத்தத்தால்

# எகிறியது வரி




### தனிநபர் வருமானவரி 36%வரை உயர்வு

### நிறுவன வரியானது 30% அதிகரிப்பு

### சுற்றுலாத்துறை வரி 14% அதிகரிப்பு

நிதி மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின்படி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், தற்போது மாதாந்தம் 250,000 ஆயிரம் ரூபாயாக உள்ள தனிநபர் வருமான வரி எல்லையை, ஒரு இலட்சம் ரூபாய் வரையில் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இலங்கையர்களுக்கு ஆஸி. கடுமையான எச்சரிக்கை

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் செல்லுபடியாகும் வீசா இன்றி அவுஸ்திரேலியா வர முயற்சிப்பவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது. 2022 மே மாதம் முதல்,

தொடர்ச்சி P2

இறைவரி திருத்தம்

## தாக்கத்தை செலுத்தும்

### பொருளியல் நிருபர்கள் விசனம்

அரசாங்கம் மேற்கொண்டுள்ள உள்நாட்டு இறைவரி திருத்தமானது, உயர் வருமானம் ஈட்டுவோர் மாத்திரமன்றி வைத்தியர்கள், சட்டத்தரணிகள், சுயதொழில் முயற்சியாளர்கள், வணிகர்கள் மற்றும் நடுத்தர வருமானத்தை ஈட்டுவோர் உள்ளடங்கலாக நாட்டின் பெரும்பாலான தரப்பினர் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனவே ஏற்கனவே நடைமுறையிலுள்ள வருமான வரி அறவீட்டு முறைமையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மக்களுக்கு கடினமானதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இந்திய இழுவைப்படகுகளை மீள ஒப்படைக்க முடியாது



எல்லைத்தாண்டி சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு கடற்படையினரால் கைப்பற்றப்படும் இந்திய இழுவைப் படகுகளை மீள ஒப்படைக்கப்போவதில்லை என்பதில் தான் உறுதியாக இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், கைப்பற்றப்பட்ட இந்திய இழுவை படகுகளை மீள ஒப்படைக்குமாறு இந்தியாவிலிருந்து பலர் தன்னோடு தொலைபேசியில் கலந்துரையாடினாலும், அவற்றை மீள ஒப்படைக்க முடியாது என்றே தான் பதில் வழங்குவதாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2

இராணுவத்தைப் பயன்படுத்தினால்

## பின்விளைவுகள் படுமோசமாகும்



பா.நிரோஸ்

நாட்டில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள முதலில் மக்களின் விருப்பதைப் பெற வேண்டும். அதனை விடுத்து கமல் குணர்தவனவின் இராணுவத்தைப் பயன்படுத்தி பலவந்தமாக செய்ய முயற்சித்தால், நினைத்துப் பார்க்க முடியாத பின்விளைவுகளை சந்திக்க நேரிடுமென அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## மைத்திரியின் மனு குறித்து வெள்ளியன்று உத்தரவு

### மன்றில் முன்னிலையாகுமாறும் மைத்திரிக்கு அழைப்பு



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் விசாரணையை இடைநிறுத்தி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிப்பதா, இல்லையா? என்ற உத்தரவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (14) பிறப்பிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (12) அறிவித்தது.

தொடர்ச்சி P2

அடுத்த ஆண்டு

## மார்ச் 20க்கு முன்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்



உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். அவ்வாறான நிலையில் தேர்தலை பிற்போட்டுள்ளமைக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் ஜீ. புஞ்சிஹேவா, அடுத்த ஆண்டு மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

"எவரையும் கைவிடாதீர்கள்"

## நலன்புரித் திட்டத்துக்கு 23 இலட்சம் விண்ணப்பங்கள்

"எவரையும் கைவிடாதீர்கள்" என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் துரித வேலைத்திட்டத்துக்கு நேற்று (12) வரை 23 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## சிறுவர்களை கேடயமாக பயன்படுத்த வேண்டாம்

ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களை கேடயமாக பாவிப்பது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பாரிய குற்றமாகும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆர்ப்பாட்டங்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

சர்வதேச காலநிலை தொடர்பாக

## ஜனாதிபதி ரணிலின் ஆலோசகராக சொல்ஹெய்ம்



இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளின் சமாதான தூதுவராக செயற்பட்ட நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

தொடர்ச்சி P2

சுமந்திரனை கொலை செய்யும் திட்டம்:

## சந்தேக நபர்கள் நால்வருக்கும் பிணை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இலங்கையின் பக்கமும் பல்வேறு தவறுகள்



இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆட்சி முறையை மேம்படுத்தி, மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும் என உலக வங்கியின் தென்னாசியாவிற்கான தலைமை பொருளாதார நிபுணர் ஹன்ஸ் டிம்மெர் தெரிவித்துள்ளார். இலங்கையின் இன்றைய நிலைமைக்கு வெளிப்புற மற்றும் உள்ளக செயற்பாடுகள் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரம்

## குற்றச்சாட்டுகளை சவாலுக்கு உட்படுத்தி ஆட்சேபனை

2019ஆம் ஆண்டில் வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாக பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஊழியர் கனியா பனிஸ்டர் பிரான்சிஸ், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை பேணுவதற்கு சவால் விடுத்து, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (12) ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## வறுமைக்கோட்டின் கீழ் 96 இலட்சம் குடும்பங்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை சார் பேராசிரியர்கள் குழுவொன்று இலங்கையின் வறுமை நிலைமை குறித்த ஆய்வொன்றை முன்னெடுத்துள்ளனர். இந்த ஆய்வின் முடிவில், 2019 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி ஏழு இலட்சம் குடும்பங்களே இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதாக கண்டறியப்பட்டதாகவும், எனினும் 2022 ஆம் ஆண்டு தற்போது வரையில் இந்த எண்ணிக்கை 24 இலட்சம் குடும்பங்களாக அதிகரித்துள்ளதாகவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேபோல் 2019 ஆம் ஆண்டில் 30 இலட்சத்துக்கும் அண்ணளவான தனி நபர்கள் வறுமைக்கோட்டின் கீழ் தமது வாழ்க்கையை முன்னெடுத்துள்ளனர். அந்த எண்ணிக்கையும் தற்போது 96 இலட்சமாக அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை சார் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கைக்கு அமைய இலங்கையில் வாழும் மக்கள் தொகையில் 42 சதவீதமானோர் இப்போதும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக இந்த ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்த மக்கள் தொகையில் அரைவாசிக்கு அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நிலைமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மரண அடி

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசிம் மேற்கண்டவாறு தெரிவித்தார். நன்கு ஆராய்ந்து இப்புதிய வரிக் கொள்கையை அமல்ப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது எனவும் அவர் தெரிவித்தார். தகவல்கள் தொழில்நுட்ப துறையில் டொலர்களாக வருமானத்தை பெறும் இலங்கையர்கள் செலுத்த வேண்டிய வரியை 14 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக அதிகரித்து, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், இதில் எந்தவொரு நியாயமும் இல்லை தெரிவித்தார்.

தனியார் துறையில் நிறைவேற்றுப் பதவிகளில் உள்ளவர்கள் வருடமொன்றுக்கு 30 இலட்ச ரூபாயை வருமானமாகப் பெற்றால் செலுத்த வேண்டிய வரியை, தற்போது வருட வருமானம் 15 இலட்சத்தைப் பெறுபவர்களும் வரியை செலுத்த வேண்டியுள்ளது. இந்த வருடத்தில் ஏப்ரல் மாதத்திலிருந்து செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது நடைமுறையில் சாத்தியமா? எனவும் கபிர் ஹாசிம் வினவினார். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு சரிவராது என்பதாலேயே, ஐ.எம்.எப் உடன் பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு முன்னாள் வழிகாட்டல் ஒன்றைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென நாம் கோரியிருந்தோம். எனினும் அரசாங்கம் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

# எகிறியது வரி

அதற்கமைய மாதாந்த மொத்த வருமானம் ரூ. 100,000 அல்லது அதற்கு மேல் இருப்பின் வருமான வரி விதிக்கப்படும். மிக உயர்ந்த தனிநபர் வருமான வரி 36 சதவீதமாக உள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வருமான வரி அறவிடத்தகுந்த குறைந்தபட்ச வருடாந்த வருமானமான 3 மில்லியன் ரூபாய் இத்திருத்தச்சட்டமூதத்தின் பிரகாரம் 1.2 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது

தற்போதைய வரி நூற்றுக்கு 6, 12 மற்றும் 18 சதவீதம் என்ற அளவில் உள்ளது. அதில் 18 சதவீதமாக உள்ள உச்சபட்ச வரி சதவீத எல்லையை, 36 சதவீதம் வரையில் அதிகரிக்கும்.

அத்துடன், நிறுவனங்கள் தரப்பில், 14 மற்றும் 18 சதவீதம் உள்ள வரிகள், 30 சதவீதமாக அதிகரிக்கவுள்ளன. சுற்றுலாத்துறை வரியானது 14 சதவீதமாகவும், உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பான வரியானது 18 சதவீதமாக உள்ளது. இந்த வரிகள் 30 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால், வரி வருமான திரட்டல் தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கப்பெறும். இந்த வரித்திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக புதிய வரிகளை விதித்தல், வரி சதவீதங்களை அதிகரித்தல் என்பனவற்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனிநபர் வருமான வரி அறவீடு தொடர்பான புதிய வரி வீதங்கள் இதனூடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம், தனிநபர் வரி சதவீதத்தில் அதிகரிப்பைக்காண முடியும். வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் அரச வருமானத்தை அதிகரிப்பது உள்ளிட்ட ஐ.எம்.எப்புடன் இலங்கை உறுதியளித்த தொடர்ச்சியான பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாக்கத்தை செலுத்தும்

மாதாந்தம் 141,667 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 2,500 ரூபாவையும், மாதாந்தம் 183,333 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 7,500 ரூபாவையும், மாதாந்தம் 225,000 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 15,000 ரூபாவையும், மாதாந்தம் 266,667 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 25,000 ரூபாவையும், மாதாந்தம் 308,333 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 37,500 ரூபாவையும், மாதாந்தம் 350,000 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் மாதாந்தம் 52,500 ரூபாவையும் வருமான வரியாகச் செலுத்தநேரிடும்.

இருப்பினும் இதுவரையான காலமும் நடைமுறையில் இருந்த உள்நாட்டு இறைவரி சட்டத்தின்படி 141,667 ரூபா, 183,333 ரூபா, 225,000 ரூபாவை மாதாந்த வருமானமாகப் பெற்றவர்கள் வருமான வரியைச் செலுத்தவேண்டிய தேவையிருக்கவில்லை என்பதுடன் 266,667 ரூபா மாதாந்த வருமானம் பெறுவோர் 1000 ரூபாவையும், 308,333 மாதாந்த வருமானம் பெறுவோர் 3,500 ரூபாவையும், 350,000 ரூபா மாதாந்த வருமானம் பெறுவோர் 6000 ரூபாவையுமே மாதாந்த வருமான வரியாகச் செலுத்தவேண்டியிருந்தது எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இலங்கையர்களுக்கு ஆஸி. கடுமையான எச்சரிக்கை

அவுஸ்திரேலியாவிற்கு ஒழுங்கற்ற கடல்சார் குடியேற்ற முயற்சியில் ஈடுபட்டிருந்த சுமார் 9ஆயிரம் இலங்கையர்கள், அவுஸ்திரேலிய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவுஸ்திரேலியாவின் எல்லைக்காவல் தளபதி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் எல்லைக்காவல் தளபதி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். சட்டவிரோதமாக மீன்பிடித்தல், கடற்கொள்ளையர், பயங்கரவாதம் மற்றும் மக்கள் கடத்தல் போன்ற நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான உறுதிப்பாட்டின் நிமித்தமே இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டதாக ஜஸ்டின் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் அவுஸ்திரேலியாவும் சட்டவிரோதமாக எல்லைகளை கடக்க முயற்சிக்கும் எந்தவொரு படகையும் தடுப்பதற்கும், இடையூறு செய்வதற்கும், இடைமறித்து திருப்பி அனுப்புவதற்கும், கூட்டுப்பொறுப்பை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 2022 மே மாதம் முதல், அவுஸ்திரேலியாவிற்கு ஒழுங்கற்ற கடல்சார் குடியேற்ற முயற்சியில் ஈடுபட்டிருந்த சுமார் 9ஆயிரம் இலங்கையர்கள், அவுஸ்திரேலிய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## இந்தியப் இழுவைப் படகுகளை மீள ஒப்படைக்க முடியாது

இது தொடர்பில் நான் பாராளுமன்றத்திலும் உரையாற்றியிருக்கிறேன். கைப்பற்றப்பட்ட இழுவைப் படகுகளை குறைந்த விலையில் உள்ளூர் மக்களுக்கு ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தனியார் ஊடாக எரிபொருள் இறக்குமதி செய்யப்படுமாக இருந்தால் கடற்றொழிலாளர்களுக்கு போதுமானளவு எரிபொருள் வழங்கப்படும் எனவும் கூறினார்.

## பின்விளைவுகள் படுமோசமாகும்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறான விடயங்கள் தொடர்பில் கையெழுத்திட்டார்கள் என்பது தெரியவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டுவரப்பட்ட வரி கொள்கைளை தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் கிழித்தெறிந்ததோடு, வரியை அறவிடுவதற்குப் பதிலாக நாணயத்தாள்களை அச்சிட்டு செலவு செய்து முட்டாள் தனமாக அரசாங்கம் நடந்துக்கொண்டது.

எனினும் தற்போது மீள வரிகளை அதிகளவில் அறவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அப்படியென்றால் எதற்காக ஆட்சிக்கு வந்ததும் வரிகளை குறைக்க வேண்டும் எனவும் ஹர்ஷ கேள்வி எழுப்பினார்.

வரித் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும் என்றார்.

நாட்டில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள முதலில் மக்களின் விருப்பதைப் பெற வேண்டும். அதனை விடுத்து கமல் குணர்தவனவின் இராணுவத்தைப் பயன்படுத்தி பலவந்தமாக செய்ய முயற்சித்தால், நினைத்துப் பார்க்க முடியாத பின்விளைவுகளை சந்திக்கநேரிடும் என எச்சரித்தார்.

## சந்தேகநபர்கள்...

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ,ரணித்தா ஞானராஜா,சுரங்க பண்டார,சுவாதிகா ரவிச்சந்திரன் ஆகியோர் மன்றில் தோன்றினர். இதனையடுத்து சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் அவர்களினால் சந்தேக நபர்கள் நால்வர் சார்பான பிணை விண்ணப்பம் திறந்த மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அரசதரப்பு சட்டத்தரணியினால் அரச தரப்பு வாதம் மன்றில் முன்வைக்கப்பட்டது. இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன சந்தேக நபர்கள் நால்வருக்கும் நிபந்தனையுடன் கூடிய பிணையினை வழங்கினார். பிரமுகர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மைத்திரியின் மனு குறித்து வெள்ளியன்று உத்தரவு

மேலும், மனுதாரரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அன்றையதினத்தில் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அவரது சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் அறிவித்தது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தனக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இருவர் அடங்கிய அமர்வு முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## நலன்புரித் திட்டத்துக்கு 23 இலட்சம் விண்ணப்பங்கள்

அவற்றுள் 624, 714 விண்ணப்பங்கள் நேற்று (12) வரை தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள 341 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள நலன்புரி உதவித் தகவல் அலகுகள் மூலம் அனைத்து விண்ணப்பங்களும் உடனடியாக இத்தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்படும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னோடி திட்டம் அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலகங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றதுடன், மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நலன்புரித்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 3.3 மில்லியன் குடும்பங்களுக்கு மேலதிகமாக, 600,000 குடும்பங்கள் கொவிட் இரண்டாம் அலை மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாக புதிதாக குறைவருமான நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த 06 இலட்சம் குடும்பங்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, இந்த சமூக நலத்திட்டத்திற்கு 3.9 மில்லியன் குடும்பங்கள் விண்ணப்பிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

39 இலட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் இந்த திட்டத்தின் கீழ் நலன்புரி உதவிகளைப் பெறவுள்ளன. 06 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையின் போதே, இரண்டாம் கட்டப் பணிகளும் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், அடுத்த கட்டமாக வீட்டு அலகுகளுக்குச் சென்று தரவுகளை சேகரிக்கவுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அதற்காக, பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் 30.08.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளதோடு, 29.09.2022 வரை, தரவுக் கட்டமைப்பில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைநெருங்கியுள்ளது.

## சிறுவர்களை கேடயமாக்க பயன்படுத்த வேண்டாம்

சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று 12) முற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

சட்டவிரோதமான முறையில்இந்தியாவுக்குச் செல்லமுற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்களிடையே இருக்கும் சிறுவர்கள், பெற்றோரிடமிந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது கவனத்தை செலுத்திய ஜனாதிபதி, பெற்றோரிடம் அந்த சிறுவர்களை தங்கவைக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

## ஜனாதிபதி ...

ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறேன் என எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (12) சந்தித்து கலந்துரையாடியிருந்தார். நாட்டின் நெருக்கடி நிலைமைகள், மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது குறித்து எரிக் சொல்ஹெய்ம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதானது, " ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆரோக்கியமான கலந்துரையிடல் ஒன்றினை முன்னெடுத்துள்ளேன். பசுமைப் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் காலநிலைத் தலைமைத்துவத்திற்கான சிறந்த தொலைநோக்குடையவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரது சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

## மார்ச் 20க்கு...

பிற்போடப்பட்டுள்ள தேர்தல்கள் குறித்து கலந்துரையாடும் நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, டலஸ் அணியினர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நேற்று (12) தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரை சந்தித்திருந்தனர். இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அமையவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்திருந்தபோது,

மாகாணசபைகள் காணாமல் போயுள்ளதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் மாகாணசபைகள் காணாமல் போகவில்லை, மாகாணசபையை காணாமலாக்கியுள்ளனர்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## குற்றச்சாட்டுகளை...

மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலேல்ல முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றவியல் சட்டத்தின் 189 மற்றும் 190 பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை பேணுவதை சவால் செய்யும் வகையில் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தார். அதனையடுத்து, அடுத்த விசாரணைத் தினமாக நவம்பர் 8ஆம் திகதியை அறிவித்த நீதிபதி, அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னர், எழுத்துமூல ஆட்சேபனைகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்காக பொய்யான தகவல்களை வழங்கியதாக கனியா பன்னிஸ்டர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## இலங்கையின்...

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உண்மையான அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சீர்திருத்தங்கள் அவசியம் எனவும் கடந்த காலங்களில் கடினமான சூழ்நிலைகளில் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆகவே இலங்கை மத்திய வங்கியின் இடைநிலை ஆட்சியின் வரலாற்றில் மிக மோசமான நாணய நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போதைய நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு இலங்கை மாற்றியமைக்கும் சீர்திருத்தங்கள் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# மஹிந்தவை சந்தித்தார் சொல்ஹெய்ம்

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டமைக்கு, இதன்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில், இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகளில் தூதுவராக செயற்பட்டு பங்களிப்பை வழங்கியமையையும் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது நினைவு கூர்ந்திருந்தார்.



மேலும், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமையில் இருந்து மீளும் விதமாக நோர்வே முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எரிக் சொல்ஹெய்ம்மிடம் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நோர்வே உதவிகளை வழங்கும் என எரிக் சொல்ஹெய்ம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார். இந்தச் சந்திப்பில் உயர்கல்வி அமைச்சர் சுரேன் ராகவனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மந்தபோசனம்

# 02 சதவீதத்தால் அதிகரிப்பு



நாட்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் போசாக்கு குறைபாடு 2 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அடுத்த சில ஆண்டுகளில் மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள் உருவாவதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் மிக சிறந்த நாடாக இருந்த நாம் வீழ்ச்சி கண்டுள்ளோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (12) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளின் போசாக்கு தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மைய நாள்களில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த ஐந்து முதல் பத்து வருடங்களில் நாம் காணாமல் போய்விடலாம். ஆனால், நம் குழந்தைகள் குறைந்த மனநலம் மற்றும் குறைந்த ஆற்றல் கொண்ட குழந்தைகளாக மாறினால் அதற்கு நாம் ஒரு நாள் சபிக்கப்படுவோம்.

எனவே, அடிப்படை விடயங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மக்களின் பசி, குழந்தைகளின் போசாக்கின்மை, கர்ப்பிணி தாய்மார்களுக்கான உணவு என்பனவே எனக்கு அடிப்படைத் தேவைகளாகத் தெரிகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, குழந்தைகளின் போசாக்கு நிலை தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மைய நாள்களில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு இராணுவ ரீதியாக மட்டுமன்றி

# உணவு, பொருளாதார ரீதியிலும் பாதுகாக்கப்பட வேண்டும்



நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தில் மட்டுமன்றி உணவு மற்றும் பொருளாதார பாதுகாப்பிலும் தங்கியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) முற்பகல் நடைபெற்ற தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதி செய்யும் நிகழ்ச்சி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதி செய்யும் நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தும்போது, அரச பொறிமுறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏதேனும் பிரச்சினைகள் உருவாகுமாயின் அதனை சரிசெய்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் தலையிடுவதற்குத் தயார் என்றும் இதன்போது தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக விவசாயத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை இயற்ற வேண்டியதும் அவசியம் என்றார். 'எந்தவொரு பிரஜையும் உணவின்றி பசியால் வாடக்கூடாது' என்ற தொனிப்பொருளில் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையத்தை பலப்படுத்தும் பல் துறைகளின் ஒன்றிணைந்த பொறிமுறையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின்பேரில் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவ்வேலை திட்டத்தின் மாவட்ட மட்ட முன்னேற்றம் தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும் கிராம மட்டத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு பல்வேறு வேலைதிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ற வகையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, எரிபொருள், உரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பிலும், காணிப்பிரச்சினை, விதைப் பற்றாக்குறை, வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

# குறைத்து மதிப்பிட வேண்டாம்

பா.நிரோஸ்



கோப் குழுவின் உறுப்பினர்களைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என தெரிவிக்கும் அக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கோப் குழுவின் தலைவரால் தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவிகளை பெறுவதற்கு இலங்கை தீர்மானித்திருக்கிறது. இதுபோல நிவாரணங்களையும், கடன் உதவிகளைப் பெறுவதற்காகவே நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கையை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் மீண்டும் அமைதியற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களது எதிர்காலத்தை வேறொருவர் இல்லாமலாக்குவதற்கு இடமளிக்க வேண்டாம்.

கோப் குழுவில் 26 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே அதன் தலைவரால் தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது. அனைத்து உறுப்பினர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறே செயற்பட வேண்டியிருக்கும். கோப் குழுவின் உறுப்பினர்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் கவலையடைகிறேன். அத்தோடு, குழுவின் உறுப்பினர்களை குறைத்து மதிப்பிட வேண்டாம் எனவும் கூறினார்.



சர்வதேச ஆதரவு குறித்து

# சொல்ஹெய்ம் – ருவான் கலந்துரையாடினர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள எரிக் சொல்ஹெய்மை, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தனவை நேற்று (12) சந்தித்துள்ளார். அத்துடன் எதிர்காலத்தில் ஏற்படும் காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் குறித்தும், அதற்கு சர்வதேச ரீதியாக கிடைக்கக்கூடிய ஆதரவு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ருவான் விஜயவர்தன தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மொட்டின் கூட்டத்தால் பலருக்கும் குழப்பம்

பா.நிரோஸ்

களுத்துறையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டம் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாக வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன, இதனால் பலரும் குழப்பமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனேயே அரசியல் செய்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். மாறாக அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டாரவுடன் இல்லை என்றார். ரங்கே பண்டார முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான விமர்சனங்களையே முன்வைத்து வருவதாகவும், ரங்கே பண்டாரவுக்கு மஹிந்த தனிப்பட்ட வகையில் உதவிகளை செய்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

# பொருளாதார குற்றவாளிகளை அரசாங்கம் காப்பாற்ற முயல்கிறது

பா.நிரோஸ்



நாட்டின் பொருளாதார குற்றவாளிகளை தற்போதைய அரசாங்கம் காப்பாற்றி வருவதாகத் தெரிவித்த கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார், நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு பொருளாதாரம் வீழ்ந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் மீது ஐ.நா குற்றஞ்சுமத்தியிருந்த போதிலும், அவர்களை காப்பாற்ற அரசாங்கம் முயல்கிறது எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவரது அமைச்சரவையில் இருந்தவர்களே நாட்டின் பொருளாதாரக் குற்றங்களுக்குக் காரணமென ஐ.நா கூறுகிறது. பொருளாதாரக் கொலையாளிக்கு எதிராக நீதியைக் கோரி, மக்கள் வீதிக்கு இறங்கி போராடும்போது அவர்களை அடக்கி வருகிறது. எனவே, பொருளாதார குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி விடுக்கும் சவால்

# திலினிக்கு பாதுகாப்பை வழங்கியது யார்?



நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள திலினி பிரியமாலிக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்கியது யார் என தேசிய தொழிற்சங்க நிலையத்தின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க கேள்வி எழுப்பினார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள திலினி பிரியமாலியிடம் பணத்தை வைப்பு செய்துள்ளதாக ஜே.வி. பியினர் மீது சமூகவலைத்தளத்தில் போலியான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை தொடர்பில் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துவிட்டு, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, சமூக வலைத்தளங்களில் பதிவுகளை இடுவோர், உண்மைகளை எழுதுவதற்காவது கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபருக்குக் கீழ் உள்ள சி.ஐ.டியில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம். இதனை விசாரித்து ஜே.வி.பியினர் பணத்தை வைப்பு செய்திருப்பதை நிரூபிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நாட்டின் கறுப்புப் பணம் திலினியிடம் இருக்கிறது. திலினிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்கியது யார்? அலரிமாளிகையில் இருக்க வேண்டிய எம்.பிகள் பாதுகாப்பு பிரிவினரை திலினிக்கு வழங்கியது எவ்வாறு என கண்டறிய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சி.ஐ.டியினருக்கு

# ஜே.வி.பி விடுக்கும் சவால்



மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன பல்வேறு விடயங்கள் தொடர்பில் 13க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் பதிவு செய்துள்ளபோதிலும், இதுவரையில் ஒருமுறைப்பாட்டை கூட உரிய முறையில் விசாரிக்கவில்லை என ஜே.வி.பியின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபயவோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவோ முறைப்பாடுகளை பதிவு செய்தால், சி.ஐ.டியினர் உடனடி நடவடிக்கை எடுத்து சந்தேக நபர்களை 24 மணித்தியாலங்களுக்குள் கைது செய்திருப்பார்கள். எனினும், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்கள் முறைப்பாடு செய்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, திலினி பிரியமாலியிடம் பணம் பெற்றதாக ஜே.வி.பியினர் மீது சமூக வலைத்தளங்கள் ஊடாக போலியாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சி.ஐ.டியில் மூன்று முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளோம். முடியுமாக இருந்தால் அந்த சமூக வலைத்தளத்துக்குப் பொறுப்பான நபர்களை சி.ஐ.டியினர் கைது செய்ய வேண்டுமென சவால் விடுத்தார்.







# கலைமகள் விழா

நீர்கொழும்பு/தோப்பு, றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் கலைமகள் விழா அண்மையில் ஆரம்பப்பிரிவு பிரதான மண்டபத்தில் அதிபர் இரா. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் இலத்திரினியல் விரிவாக்கல் பிரிவின் விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிறீபிருந்திரன் கலந்து சிறப்பித்தார். மாணவர்களின் பல்வேறுபட்ட நடன, இசை, நாடக ஆற்றுகைகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு

# என்ன நடந்தது எனக் கூறுங்கள்

அதன்பின்னர் நட்டஈடு பற்றிப் பேசுங்கள்

எம். றொசாந்த்

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கூறிய பின்னர் நட்டஈடு பற்றிக் கதையுங்கள் என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல்



ஆக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை இரண்டு இலட்சம் ரூபாயாக அதிகரிப்பது என்பது உறவுகளை ஏமாற்றும் செயல். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், சட்டரீதியாக திட்டவட்டமாக கூற முடியாத நிலையில் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கூறிய பின்னரே நட்டஈடு பற்றிக் கதைக்க முடியும்.

ஆனால், அவை பற்றிப் பேச அரசாங்கம் தயார் இல்லை. ஏனெனில், அது தொடர்பில் பேசினால் இராணுவம் உள்ளிட்ட பல தரப்பினர் குற்றவாளிகள் ஆக வேண்டிய நிலைமை ஏற்படும். அதனாலயே, அவை தொடர்பில் பேசாது, நட்டஈடுகளை வழங்குவது தொடர்பில் பேசி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஏமாற்ற முனைகிறார்கள் என மேலும் தெரிவித்தார்.

காணாமல்போனோரின் உறவுகளிடம்

# மீண்டும் விசாரணை

வ. சக்தி



காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், நேற்று (12) மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் வைத்து, காணாமல்போனோரின் உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொழும்பிலிருந்தும் மட்டக்களப்பிலிருந்தும் வருகை தந்த அதிகாரிகள், விசாரணைகளை மேற்கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இதன்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் கலந்து கொண்டு, தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், 75 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், மாவட்டத்தில் மொத்தமாக 450 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடி, மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் ஐந்து நாள்கள் இவ்வாறு காணாமல்போன உறவினர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு இணங்க, அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் பரிந்துரை செய்யும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேற்படி பிரதேச செயலகத்தில், ஆறு பனல்களில், அப்பகுதியைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டு தமது உறவுகள் காணாமல் போனவிடயம் தொடர்பில், முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தார்கள்.

# "பணத்தைக் கொடுத்து உயிரை எடுக்கும் அரசாங்கத்தின் செயலை கண்டிக்கின்றோம்"

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம்

சண்முகம் தவசீலன்

எமது தொடர்போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத இலங்கை அரசாங்கம், எங்களை முறியடித்து, போராட்டத்தை நிறுத்தினால் எந்தப் பிரச்சினையும் வராது என்று, எங்களைப் பந்தாடிக்கொண்டிருக்கிறது.

திங்கட்கிழமை (10) அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், குறித்த ஆளொருவர் காணாமல் போயுள்ளமையை இழப்பீட்டு அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், செலுத்தப்படுகின்ற தொகையை 200,000 ரூபாய் வரை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இது ஒரு கண்துடைப்பாகவும் தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதை வெளிப்படுத்தவும்தான் இந்த இரண்டு இலட்சத்தைக் கொடுத்து ஏமாற்ற உள்ளார்கள் என்று, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்





உறவினர்களின் சங்கத்தின் இணைப்பாளர் ம. ஈஸ்வரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை தேடும் போராட்டம் எட்டு மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது. சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்தித்தான் போராட்டத்தை மேற்கொண்டுவருகின்றோம். நாங்கள் இராணுவத்திடம் கையளித்தவர்கள், வீடுகளில் வந்து எங்கள் கண்முன்னால் கொண்டு போனவர்கள், வெள்ளைவானில் வைத்து கடத்தப்பட்டவர்கள், கடலில் கைதுசெய்யப்பட்டவர்கள் என எங்களுக்கு முன்னால் நடந்தவற்றைத்தான் சாட்சியமாக நாங்கள் நின்று, தேடலில் ஈடுபட்டு வருகின்றோம்.

எங்களின் உயிர், இரண்டு இலட்சத்துக்கா பெறுமதி? பணத்தைக் கொடுத்து உயிரை எடுக்கும் அரசாங்கத்தின் இந்தச் செயலை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எங்கள் உயிர்களை எங்கள் கையில் தருவதற்கான சாட்சியங்களாக நாங்கள் இருக்கின்றோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நீதியைப் பெற்று, தண்டனையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்காக எல்லோரும் தொடர்ந்து போராடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை உயர்த்த

# பெண்களை கொண்டு இரவு களியாட்டங்களா?

திருக்கோவில் எஸ். கார்த்திகேசு

இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு, பெண்களைக் கொண்டு இரவு களியாட்ட விழாக்களா? நாடும் ஆட்சியாளர்களின் சிந்தனையும் அழிவை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் எம். பி கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம், விநாயகர் விளையாட்டு கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்த கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கருத்து தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்து



தெரிவிக்கையில்;

இந்த நாட்டின் பெண் அமைச்சர் ஒருவர், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக, இரவு நேரக் களியாட்ட நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தெரிவித்து இருப்பதன் ஊடாக, இந்த நாடும் நாட்டின் ஆட்சியாளர்களின் சிந்தனைகளும் அழிவை நோக்கிச் சென்று கொண்டு இருப்பதை எடுத்து காட்டுவதாக அமைந்திருக்கின்றது என்றார்.

# மாணவர்களின் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் செயலமர்வு



நூருல் ஹுதா உமர்

புத்தாக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயலமர்வு அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம் றஹ்மதுல்லாஹ் தலைமையில் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

கல்வி அமைச்சால் SESIP செயற்றிட்டத்தினூடாக, அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட ஆறு பாடசாலைகளுக்கு, தலா எட்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களது கண்டுபிடிப்புகளை வணிகமயப்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கும் பாடசாலைகளில் புத்தாக்க கழகங்களை நிறுவுவதற்கும் பயன்படுத்தப்பட உள்ளது.

மேலும், இளம் விஞ்ஞானி எஸ். வினோஜ்குமார், வளவாளராக கலந்து கொண்டு புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப்பத்திரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்.

வலயக்கல்விப் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில், மாணவர்களுக்கு புள்ளிகளை நோக்காக மட்டும் கல்வித் திட்டம் கொண்டிராமல் புத்தாக்கத்தினூடாக எதிர்கால சவால்களை எதிர்க்கும் இவ்வாறான புதிய திட்டத்தை கல்வி அமைச்சு ஆரம்பித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் ஒன்றிணைத்து, புத்தாக்கம் கண்காட்சியை நடத்தவுள்ளோம். அதில் சிறந்த கண்டுபிடிப்புகளை கல்வி அமைச்சினூடாக வணிகமயப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இந்த வருடம், இலங்கையில் உள்ள 750 பாடசாலைகளுக்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# சுழற்சி முறைக் கடன் திட்டத்துக்கு நிதி

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், தாவடி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு, சுழற்சி முறைக் கடன் வழங்குவதற்காக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சமூக மேம்பாட்டுப் பிரிவினால் ஒரு தொகை நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (12) தாவடி வடக்கில் வலி தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சந்திரவதனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கனடா முக்கியஸ்தர் கே. கந்தசாமியின் நிதிப்பங்களிப்பில் மாதர் அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளிடம் குறித்த நிதி கையளிக்கப்பட்டது.


உக்கிர சண்டை நடைபெற்ற

# ஆனந்தபுரத்தில் மனித எச்சங்கள்

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் காணி ஒன்றில் இருந்து மனித எச்சங்கள் இனம் காணப்பட்டுள்ளன. இறுதிக்கட்ட போரின்போது உக்கிர சண்டை நடைபெற்ற இடம்மாக ஆனந்தபுரம் காணப்படுகின்றது. ஆனந்தபுரம் கிருஷ்ணர் கோவிலுக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்தே நேற்று முன்தினம் (11) கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் மீதான தடயவியல் பரிசோதனை நேற்று (12) நடத்தப்பட்டது.

இது தொடர்பில், புதுக்குடியிருப்பு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



வல்லையில் வழிப்பறி

# மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்களிடம் கைவரிசை

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், வல்லை பகுதியில் மூன்று பெண்களிடம் சுமார் 10 பவுண் தங்க நகைகள் வழிப்பறி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் (11) இரவு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தெரியவருவதாவது: வல்லை வெளி பகுதி ஊடாக, மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களை வழிமறித்த கொள்ளையர்கள், கத்தியை அவர்களின் கழுத்தில் வைத்து, அவர்கள் அணிந்திருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலி உட்பட, 08 பவுண் நகைகளை வழிப்பறி கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சில மணி நேரத்தில், வல்லைவெளியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரை, பின்னால் வந்து மோதி விபத்துக்குள்ளாக்கி விட்டு, அப்பெண் அணிந்திருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலி, திறன்பேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

குறித்த, வல்லை பகுதி நீரேந்து பகுதியாக காணப்படுவதுடன் ஆள்நடமாட்டம் குறைந்த, குடியிருப்புக்கள் அற்ற பகுதியாகும். இந்தப் பகுதியில், இரவு வேளையில் இருள் சூழ்ந்து காணப்படுவதால், வழிப்பறி கொள்ளையர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதுடன் இந்தப்பகுதி ஊடாக பயணிப்பது ஆபத்து நிறைந்ததாகம் தற்போது மாறி வருகிறது.

பிரம்படியில் இந்திய இராணுவத்தின் படுகொலை:

# 35ஆவது ஆண்டு நினைவு தினம்

எம். றொசாந்த்

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள், யாழ்ப்பாணம், பிரம்படி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நினைவு தூபி முன்பாக, நேற்று (12) இடம்பெற்றன.

படுகொலையானவர்களின் உறவுகள், நினைவேந்தலில் கலந்து கொண்டு உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு ஒக்டொபர் மாதம் 11, 12ஆம் திகதிகளில், இந்திய இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட 'ஒப்பரேசன் பவன்' நடவடிக்கை மூலம், அப்பகுதியை சேர்ந்த சுமார் 50 க்கும் மேற்பட்டோரை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தனர்.

# மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடலாமா?



காரைதீவு சகா

சமகாலத்தில் மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுகின்றனர். இது முறையா என்ற கேள்வி எழுகின்றது. சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று, எம்மிடம் இருக்கின்ற ஆற்றல்களை, திறமைகளை ஆசிரியர்கள் வெளிக் கொணர வேண்டும். அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம் அமீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய முப்பெரும் விழா, வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நேற்று(12) நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் தின விழா, சிறுவர் தின விழா, முதியோர் தின விழா ஆகிய மூன்று விழாக்களையும் இணைத்து 'முப்பெரும் விழா' நடைபெற்றது. விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் கூறியதாவது:

பெரிய பாடசாலைகளில் பரீட்சை வைத்து 90 - 100 புள்ளிகளை பெற்றவர்களுக்கு மட்டுமே இடம் வழங்குகிறார்கள். இது சரியா? இதுவும் இன்று கேள்வியாகிறது. உண்மையிலேயே படிக்காதவர்களை படிக்க வைக்கும் இடம்தான் பாடசாலை. நோய் இல்லாதவருக்குத்தான் வைத்தியம் பார்ப்பேன் என்று ஒரு வைத்தியர் கூற முடியாது என்றார்.

பாடசாலையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப்பை, கற்றல் உபகரணங்களை அன்னமலை தனவந்தர்கள் அன்பளிப்பு செய்தார்கள்.

# நாவற்குடாவில் புத்தகக் கண்காட்சி

வீ.ரீ. சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும், மட்டக்களப்பு, நாவற்குடா இந்து கலாசார பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) ஆரம்பமானது.

இக் கண்காட்சியை கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர். இக்கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.



ஹட்டன் நகர வர்த்தக நிலையங்களுக்குள்

## திடீரென புகுந்த சுகாதார பரிசோதகர்கள்

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, நுகர்வோருக்கு தரமான உணவுகளை வழங்கும் நோக்கில், ஹட்டன் மற்றும் டிக்கோயா நகரங்களில் உள்ள உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனையை நேற்று (12) மேற்கொண்டனர்.

ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் சுகாதாரப் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க, புதிய திஸ்பனை, கொட்டகலை, அம்பகமுவ, மஸ்கெலியா, பொகவந்தலாவ ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவொன்று இணைந்து இந்தத் திடீர் சோதனையை மேற்கொண்டது.

இதன்போது, தீபாவளி பண்டிகையின் போது தோட்ட மக்களுக்கு விற்பனை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல உணவுப் பொருட்கள், பொது சுகாதார பரிசோதகர்களிடம் சிக்கியதுடன், கைப்பற்றப்பட்ட காலாவதியான பொருட்களை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சுற்றிவளைப்பில் லேபிள் விதிமுறைகளை மீறிய வர்த்தகர்கள் பலருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் உள்ளது.

தீபாவளி முற்பணமாக

# ரூ.15,000 வழங்க JEDB, SSPC இணக்கம்

■ *மஹேஸ்வரி விஜயனந்தன்*

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இம்முறை தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாய் வழங்கப்படும் என பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்திருந்த நிலையில், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (JEDB), இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுதாபனம் (SSPC) ஆகியன தம்மால் 10,000 ரூபாய் மாத்திரமே தீபாவளி முற்பணமாக வழங்க முடியுமென அறிவித்திருந்தன.

இந்த நிலையில் JEDB, SSPC என்பன தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாயை வழங்க தற்போது இணக்கம் தெரிவித்துள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் தனக்கும் குறித்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றதாகவும் இதன்போதே, அவர்கள் இதற்கு இணக்கம் தெரிவித்தனர் என்றும் குறிப்பிட்டார்.

JEDBக்குச் சொந்தமான தோட்டங்களில் 10,000 ரூபாய் தீபாவளி முற்பணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், நிதி பிரச்சினை காரணமாக குறித்த தோட்டங்களில் உள்ள கூட்டுறவு நிலையங்கள் ஊடாக மேலதிமாக 5ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.



## மாத்தளையில் 49 பேர் கைது

■ *மஹேஸ் கீர்த்திரத்ன*

மாத்தளை பொலிஸ் தலைமையகத்தால் அண்மையில் மாத்தளை நகரில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 49 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் குற்றசாட்டுகள் உள்ளிட்ட பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த 15 பேரும் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி தொடர்பில் 6 பேரும் கஞ்சா போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேரும் ஏனையவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



உக்கிய மின்சார கம்பங்களால்

## கியூ தோட்ட மக்கள் அச்சத்தில்

■ *துவாரக்ஷன்*

150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் பொகவந்தலாவ- கியூ தோட்ட மக்களின் பயன்பாட்டுக்காக 20 வருடங்களுக்கு முன்பு நாட்டப்பட்ட, 25க்கும் மேற்பட்ட மர தூண்கள், உக்கி மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதால் மழைக்காலங்களில் இத்தோட்ட மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியிலேயே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை மாற்றுவதற்காக மின்சார சபையால், கொங்கிரிட் தூண்கள் கொண்டுவரப்பட்டு, பழுதடைந்த தூண்களுக்குப் பக்கத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மின்சார சபை ஊழியர்களால் நாட்டப்பட்ட போதிலும் இதுவரை பழுதடைந்த தூண்களில் இருந்து மின் கம்பிகள் கொங்கிரீட் தூண்களுக்கு மாற்றப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

எனவே, உக்கிய நிலையில் உள்ள மின் கம்பங்களை மாற்றித் தருமாறு இத்தோட்ட மக்கள், மஸ்கெலியா மின்சார சபை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுகின்றனர்.



கொட்டகலை பிரதேச சபையின்

## 2023 பாதீடு நிறைவேற்றம்

■ *எஸ்.கணேசன்*

கொட்டகலை பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மந்த போசனையைக் குறைக்கும் வகையில், அடுத்த ஆண்டில் சத்துணவுத் திட்டத்துக்காக 25 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தமது உரையில் தெரிவித்தார்.

> **சத்துணவு வழங்குவதற்காக 25 இலட்ச ரூபாயும், சக்கரகதிரை அல்லது ஊன்றுகோல் பெற்றுக் கொடுப்பதற்காக 75 ஆயிரம் ரூபாயும், லொக்ஹில் கிரிஸ்லர்ஸ்பாம் ஆற்றை அகலப்படுத்த 38 இலட்ச ரூபாயும், கொட்டகலை மைதானத்தில் விளையாட்டரங்கம் அமைக்க 50 இலட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அடுத்த ஆண்டுக்கான சபையின் வருமானம் 15 கோடியே 46 இலட்சத்து 5 ஆயிரத்து 20 ரூபாயாகவும், செலவினம் 15 கோடியே 46 இலட்சத்து 3 ஆயிரத்து 865 ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

மந்த போசனைக்குள்ளான சிறுவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக 25 இலட்ச ரூபாயும், சக்கரகதிரை அல்லது ஊன்றுகோல் பெற்றுக் கொடுப்பதற்காக 75 ஆயிரம் ரூபாயும், லொக்ஹில் கிரிஸ்லர்ஸ்பாம் ஆற்றை அகலப்படுத்த 38 இலட்ச ரூபாயும், கொட்டகலை மைதானத்தில் விளையாட்டரங்கம் அமைக்க 50 இலட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன், கடந்த 6 வருடங்களாக முழுமையடையாமல் இருக்கும் கொட்டகலை பிரதேச சபையின் கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்கீழ் 50 மில்லியன் கடனாகப் பெற்றுக் கொள்ளுதல், குப்பைகளை மீள் சுழற்சி செய்தல், சேதனப் பசளை திட்டத்தை அதிகரித்தல், உழவு இயந்திரம் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

ஹட்டன்–டிக்கோயா நகர சபைக்கு

## ஏல விற்பனையின் மூலமாக ரூ, 4.2 மில்லியன் வருமானம்

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*



ஏல விற்பனையால் ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்கு 42 இலட்ச ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக ஹட்டன் டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரதன் தெரிவித்தார்.

ஹட்டன் நட்சத்திர சதுக்கம், ஹட்டன் பஸ் நிலையம், ஹட்டன் பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள 155 காணிகள் இம்மாதம் 24ஆம் திகதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் ஏலம் விடப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார்.

மேலும், குறித்த காணிகளில் நிர்மாணிக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக உள்ளூர் கொள்வனவாளர் ஒருவர் அதனை 4 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் கொள்வனவு செய்ததாகவும், ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தை வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்ததாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

> **ஹட்டன் நட்சத்திர சதுக்கம், ஹட்டன் பஸ் நிலையம், ஹட்டன் பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள 155 காணிகள் இம்மாதம் 24ஆம் திகதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் ஏலம் விடப்பட்டது**

இவ்வாறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து வர்த்தகர்களும் ஹட்டன் டிக்கோயா நகர சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் எனவும், அதனை மேற்பார்வையிட நகர சபையிலிருந்து அதிகாரிகள் குழுவொன்று ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.



## மாணவர்களுக்கு போதை ஊட்டியவர் கைது

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து, போதையூட்டும் குளிசைகளை விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர், அந்த குளிசைகளுடன் கினிகத்தேன பொலிஸாரால் நேற்று முன்தினம் (11) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வைத்தியரின் அனுமதியுடன் மருந்தகங்களில் விநியோகிக்கப்படும் ஒரு வகை குளிசைகள், கினிகத்தேனை பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுவதாக கினிகத்தேன பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்த போது, அவரிடம் போதையூட்டும் குளிசைகள் 105 இருந்ததாகவும், சந்தேக நபரால் அவை அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நாவலப்பிட்டியைச் சேர்ந்த 35 வயதுடைய சந்தேகநபர், நீண்ட காலமாக இந்தப் போதையூட்டும் குளிசைகளை விற்பனை செய்து வந்துள்ளதாகவும், சந்தேகநபர் ஹட்டனில் உள்ள மருந்தகம் ஒன்றில் இருந்து மொத்தமாக இந்த மருந்தை கொள்வனவு செய்து, மாணவர்களுக்கு விநியோகித்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



தனிப்பட்ட இலக்குகளை அடைய

## சிறுவர்களைப் பயன்படுத்த வேண்டாம்

### மத்திய மாகாண ஆளுநர் கோரிக்கை

■ *ஷேன் செனவிரத்ன*

பல்வேறு தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்கு சிறுவர்களை பயன்படுத்தக் கூடாது என தெரிவித்துள்ள மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும் என்றார்.

மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், குழந்தைகளுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்கள் செயற்படுவது மிகவும் அவசியம். சமூக வலைதளங்கள் மூலம் பரவும் சில பெண் ஆசிரியர்களின் செயற்பாடுகள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக உள்ளதா என்ற சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பாடசாலை கல்விச் சூழலில், குழந்தைகளின் மனப்பான்மையை வளர்ப்பதுடன், அவர்களை நெறிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. எனவே, குழந்தைகளுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்கள் செயற்படுவது மிகவும் அவசியம் என்றார்.

தகவல் அறியும் சட்டம் தொடர்பான

## தெளிவுபடுத்தல் செயலமர்வு

■ *என். ஆராச்சி*

புளத்கொஹூபிட்டிய பிரதேசத்திலுள்ள ஊடகவியலாளர் உள்ளிட்டவர்களுக்கு தகவல் அறியும் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் செயலமர்வு நடத்தப்பட்டது.

புளத்கொஹூபிட்டிய பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்தத் தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று முன்தினம் (11) நடைபெற்றது.

ட்ரான்ஸ்பெரன்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இந்தச் செயலமர்வின் வளவாளராக சாய் பாலசுப்ரமணியம் கலந்துகொண்டு, இச்சட்டம் தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்கினார்.



# இளவயது போதை அடிமைகளால் சீரழியும் தேசம்

ஒரு காலமிருந்தது! அக்காலத்தில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே போதைப் பொருட்களை கிரமமாக பயன்படுத்துபவர்களாக இருந்தார்கள். சிறுவர்களின் கைகளுக்கு போதைப் பொருட்கள் செல்வது அரிதாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட வயது வரை, போதைப்பொருட்களை கையால் தொடுவது கூட பெரும் பாவமாக, அவமானமாக கருதப்பட்டது. ஆனால், இன்று எல்லாமே தலைகீழாக மாறியிருக்கின்றது.

பாரம்பரிய புகையிலை உற்பத்திகளின் பயன்பாட்டுக்கு மேலதிகமாக, புதுப்புதுப் பெயர்களிலான, ஆபத்தான, பக்கவிளைவுகள் அதிகமுள்ள போதைப்பொருட்கள், சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளமை வெள்ளிடைமலை.

30-40 வயதை தாண்டியவர்கள் மட்டுமன்றி, இளைஞர்கள், பராயமடையாத சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் என வயதுவேறுபாடின்றி, கணிசமானோர் போதைகளுக்கு முழுநேர அடிமையாகி உள்ளனர். ஆண்கள் மட்டுமன்றி, பெண்களிடையேயும் போதைப் பொருட்கள், போதையூட்டும் 'டொபி' வகைகளின் பாவனை அதிகரித்து வருகின்றது என்பது இரகசியம் அல்ல!

போதைப்பொருட்களின் பரவல், வடக்கில் அதிகரித்திருப்பதாகக் தரவுகள் கூறுகின்றன. ஆனால், உண்மையில் கிழக்கு உட்பட நாட்டின் எல்லா பாகங்களிலும் போதைப்பொருட்களின் சந்தை விஸ்தரிக்கப்பட்டு உள்ளதாகவே தெரிகின்றது.

நவீன போதைப் பொருட்கள் உடல் ஆரோக்கியத்திலும் மனநிலையிலும் ஏற்படுத்தும் மாற்றங்கள், தாக்கங்கள் பாரதூரமானவையாகும். புத்தி பேதலித்தல், மனநோயாளியாதல், வன்முறைகளில் ஈடுபடுதல் தொடக்கம் கொலை செய்யத் தூண்டுமளவுக்கு, போதைப்பொருட்களை நுகர்வோர் பாதிப்புகளை சந்திக்கின்றனர்; பின்னர், வாழ்க்கையையே இழந்துவிடுகின்றனர்.

போதைக்காக மனைவியை தாக்கிய கணவன், பெற்ற தாயை கொன்ற தனயன், போதையில் கொலை செய்த இளைஞன், போதைவஸ்தை வாங்குவதற்கு வழியில்லாத காரணத்தால், தற்கொலை செய்த மாணவன் என, ஏகப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தாய் ஒருவர், 'போதைப்பழக்கத்துக்கு அடிமையான தனது மகனை, தன்னால் திருத்த முடியாது' என்று கூறி, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற சம்பவம், மனதை என்னவோ செய்கின்றது. நாடும், இளைய சமூகமும் எங்கே போய்க் கொண்டிருக்கின்றன என்ற கேள்வி, அபாய எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்கின்றது.

சட்டங்கள் நடைமுறையில் உள்ள போதும், போதைப்பொருள் விற்பனை அதிகரித்த வண்ணமே உள்ளது. போதைப்பொருட்களை விற்பனை செய்கின்ற மேல்மட்ட விற்பனையாளர்கள், 'பெரும்புள்ளி'களுடனும் பெரிய இடங்களுடன் தொடர்புகளைக் கொண்டவர்களாக இல்லாமல் இருக்க வாய்ப்பில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

இளைய சமூகத்தை இலக்கு வைத்தே, புதுப்புது போதைவஸ்துகள் விற்பனையாகின்றன. அத்துடன் தமிழ், முஸ்லிம் சமூகங்களே, இப்போது அவர்களது சந்தைக்கான இலக்காகவும் காணப்படுகின்றன.

இதுவெல்லாம் எதிர்காலத்தில் எந்தளவுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாதுள்ளது. எனவே அரசாங்கமும் அதிகாரிகளும் மக்களும் இணைந்து, கூட்டாக நடவடிக்கை எடுக்க தவறினால், இன்னும் 10 வருடங்களில் முழுநாடுமே கைசேதப்பட நேரிடும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பாடசாலை மாணவர்கள் கல்வியில் விருப்பம் கொள்வதற்கு, அவர்களை ஆசிரியர்கள், தங்கள் வசம் வைத்திருப்பது முக்கியமானது.

ஆசிரியர்கள் தங்களுடன் அன்பாகப் பேசுவதில்லை; சகஜமாகப் பழகுவதில்லை என, மாணவர்களில் அநேகர் எண்ணுகின்றார்கள். இதில் உண்மை இருக்கலாம்.

படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டவேண்டும். மாணவர்களை அடக்கி, ஒடுக்கி கல்வியூட்டினால், அவர்களுக்கு கற்பதில் விருபம் வராது. மேலும், சில ஆசிரியர்களைக் கண்டால் மாணவர்கள் அஞ்சிநடுங்குவதுண்டு.

ஆனால், ஆசிரியர்கள் சொல்லும் அறிவுரைகளைக் கேட்காத மாணவர்களும் உண்டு. ஒழுக்கம் என்றால் என்ன எனத் தெரியாத பிள்ளைகளுக்கு, அமைதியான வழியில் புத்திமதி சொல்வது பெரும் கலை.

சுற்றாடலின் குறைபாடுகள் மாணவர்களை ஈர்க்கலாம். ஒழுக்கம் இன்றிக் கல்வி கற்பது, சிரமமானது. பொறுமை அவசியம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# போதையால் தள்ளாடும் தமிழ் இளைஞர் சமூகம்



புருஜோத்தமன் தங்கமயில்

வடக்கில், என்றைக்கும் இல்லாத அளவுக்கு போதைப்பொருள் பாவனை, கணிசமாக அதிகரித்திருப்பதாக வைத்தியத்துறையினரும் பாடசாலை சமூகத்தினரும் தெரிவிக்கின்றனர். இதனால், சமூகக் குற்றங்களும் இளவயதினரின் தொடர் மரணங்களும் பதிவாகி வருகின்றன.

கடந்த சில மாதங்களில் மட்டும், போதைப்பொருள் பாவனையால் பத்துக்கும் அதிகமான இளவயதினர் நோய்வாய்ப்பட்டும் தற்கொலை செய்தும் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, நூற்றுக்கணக்கானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளிலும், போதை விடுவிப்பு நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான நாள்கள், வடக்கு - கிழக்கில் போதைப்பொருட்கள் இலகுவாக கிடைப்பதற்கான சூழலை ஏற்படுத்தி விட்டன. ஆயுதப் போராட்ட காலத்தில், குறிப்பாக புலிகளின் காலத்தில், பனை மரத்திலிருந்து பெறப்படும் கள்ளும் சாராயமுமே, மது வகைகளாக தமிழ் மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்தன.

ஆனால், புலிகளின் ஆட்சிக் கட்டமைப்பில் இருந்து, அரசாங்கத்தால் மீட்கப்பட்ட நிலப்பகுதிகளில், மதுபான நிலையங்கள் விரைவாக முளைத்தன. அது, பியர் உள்ளிட்ட மதுவகைகளை, இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக்கின. அது, வாழ்வின் ஒரு பகுதி எனும் நிலையை நோக்கிய திணிப்பு இடம்பெற்றது.

இதன் அடுத்த கட்டம், மனிதனை உடனடியாக சுயநினைவை இழக்க வைக்கும் போதைப்பொருட்களின் திணிப்பில் வந்து நிற்கின்றது. கஞ்சா, ஹெரோயின், கூல் ஐஸ் என்று பல வகைப் போதைப்பொருட்களும், வடக்கு - கிழக்கின் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விநியோகிக்கப்படுகின்றன. அதுவும், யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில், போதைப்பொருள் விநியோகமும் பாவனையும் சர்வசாதாரணமான விடயங்களாக மாறிவிட்டன.

போதைப்பொருள் மாபியாக்கள், உலகம் பூராவும் இளவயதினரையே குறிவைத்து, தங்களது வியாபாரத்தை திறக்கின்றன. அதிலும் குறிப்பாக, பதின்ம வயதினரை போதைக்கு இரையாக்குகின்றார்கள். அந்த வயதில் போதைக்கு அடிமையாக்கிவிட்டால், போதை மாபியாக்களுக்கு அவர் வாழ்நாள் வாடிக்கையாளர். அப்படித்தான், இலங்கையிலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே, போதைப்பொருள் வர்த்தகம் விஸ்தரிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் பாவித்த மாணவர்கள் மத்தியிலான அடிதடி, தென் இலங்கையில் அவ்வப்போது அரங்கேறுவதுண்டு. அந்த நிலை இன்றைக்கு வடக்கு - கிழக்கிலும் அரங்கேறத் தொடங்கிவிட்டது.

பாடசாலை நாளில் இடைவேளையில், போதைப்பொருட்களை உட்கொண்டுவிட்டு, வகுப்பறைகளில் மாணவர்கள் வந்து அமர்கிறார்கள் என்பது, வடக்கின் பல ஆசிரியர்களினதும் குற்றச்சாட்டு. அவ்வாறான நிலை, இயல்பான வகுப்பறையை முழுவதுமாக நாசமாக்கி, மாணவர்கள் - ஆசிரியர்களுக்கு இடையிலான விரிசலை அதிகப்படுத்துகின்றது.

ஒரு கட்டத்தில், ஆசிரியர் பணியை வாங்கும் ஊதியத்துக்கு வெறுமனே போதிக்கும் நிலைமைக்கு மாற்றுகின்றது. ஏனெனில், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இடையிலான கற்றல் - கற்பித்தல் என்பது கேள்விகள், சந்தேகங்கள் வழியாக நேர் செய்யப்பட வேண்டியது.

ஆனால், போதைப்பொருட்களை உட்கொண்ட மாணவர்கள் அமர்ந்திருக்கும் வகுப்பறைகளில், எந்த ஆசிரியரும் மாணவர்களைக் கேள்விகள் கேட்பதில்லை. அவர்களிடம் பதில்களையும் எதிர்பார்ப்பதில்லை. ஏனெனில், மாணவர்கள் ஏதாவது செய்துவிடுவார்களோ என்கிற பயம்.

கிராமப்புற பாடசாலைகளில், இந்த நிலை ஓரளவுக்கு குறைவு. ஏனெனில், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாணவர்களையும் தனிப்பட்ட ரீதியில் தெரியும். மாணவர்களில் நடவடிக்கைகளில் ஏதாவது மாற்றங்கள் தெரிந்தால், பெற்றோரை அழைத்து, விடயத்தைத் தெரிவித்து, எச்சரிக்க முடியும்.

ஆனால், நகர்புறத்திலுள்ள பிரபல பாடசாலைகளில், இவ்வாறான நிலையை பேண முடியாது. அதனால், ஆசிரியர்கள் தாமுண்டு தம் வேலையுண்டு என்று இருந்து விடுகிறார்கள்.

போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பில், அரசாங்கம் தொடர்ச்சியாகப் பேசுவதுண்டு. ஆனால், அவை மேலோட்டமானவை. ஏனெனில், பாராளுமன்றத்துக்குள் இருக்கும் உறுப்பினர்களில் கணிசமானவர்கள், போதைப்பொருள் பாவனையாளர்கள் என்பது, அடிக்கடி பாராளுமன்றத்துக்குள் வெளிப்படுத்தப்படுவதுண்டு. அத்தோடு, போதை மாபியாக்களின் முக்கியஸ்தர்கள் சிலர், பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள் என்பது குற்றச்சாட்டு.

அவ்வாறான நிலையில், நாட்டில் போதைப்பொருள் ஒழிப்பை அரசாங்கம் முறையாகச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. தென் இலங்கையிலேயே போதை பெரும் சீரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்க, வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் ஒழிப்பை அரச கட்டமைப்புகள் செய்துவிடும் என்று எதிர்பார்ப்பது நகைப்புக்குரியது.

ஏனெனில், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களையும் உரிமைகளையும் ஆக்கிரமிக்கும் எண்ணத்தோடு இருக்கும் தென் இலங்கை, அதனை செய்வதற்கான இலகுவான வழியாக, போதைப்பொருள் பாவனையை கைக்கொள்கின்றது.

வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், விற்பனையாளர்கள் என்று அடையாளம் காணப்பட்ட பலரும், வெளிப்படையாக உலாவி வருகிறார்கள். எப்போதாவது ஒரு சிலர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டாலும் அவர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான வழிவகைகளை, பொலிஸார் செய்வதில்லை என்பது குற்றச்சாட்டு.

போதைப்பொருள் கடத்தலுக்காகக் கைது செய்யப்பட்ட பலரும், நீதிமன்றங்களில் நிறுத்தப்படாமலேயே விடுவிக்கப்படுகின்ற காட்சிகள் அடிக்கடி அரங்கேறுவதுண்டு.

அரச கட்டமைப்புகள்தான், தென் இலங்கையின் பௌத்த சிங்கள மேலாதிக்க மனநிலையோடு வடக்கு - கிழக்கின் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பை அணுகுகின்றன என்று பார்த்தால், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளில் இருக்கும் சில சட்டத்தரணிகள், கஞ்சா கடத்தல்கார்களுக்கும், மாபியாக்களுக்கும் நீதிமன்றங்களில் ஆஜராகி வாதிட்டு, விடுவிக்கும் காட்சிகள் தொடர்ச்சியாக அரங்கேறுவதுண்டு.

சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தை, இந்தப் பத்தியாளர் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. ஆனால், தமிழ்த் தேசிய போராட்டம் என்பது, அறத்தில் இருந்து எழுவது. அப்படியான அறத்தைப் பேணுவதற்கு, அதில் இயங்கும் நபர்கள் அறத்தோடு இருக்க வேண்டும். அந்த அறம், சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தை பல நேரங்களில் கேள்விக்குள்ளாக்கிவிடும்.

ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருக்கும் சட்டத்தரணிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் மாபியாக்களையும் காப்பாற்ற கறுப்பு அங்கியை அணிவது என்பது, தமிழ்த் தேசிய போராட்டத்துக்கான அறத்தின் மீது ஆணி அடிப்பதற்கு ஒப்பானது.

வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் பாவனையின் அதிகரிப்பு என்பது, சமூக கட்டமைப்புகளின் வீழ்ச்சி மற்றும் பொறுப்பின்மையின் வழியாக வருவதாகும். ஏனெனில், தமிழ்ச் சமூகக் கட்டமைப்பு என்பது, ஒவ்வொரு தனி மனிதனுக்குமான பொறுப்புணர்வை சரியாக போதிக்கவில்லை. மாறாக, மற்றவர்களின் உழைப்பில் தங்கி வாழும் மனநிலையையும், மற்றவர்களை சுரண்டி வாழும் போக்கிலித்தனத்தையும் கேள்விக்குள்ளாக்காமல் விட்டுவிட்டது.

அதாவது, விழுமியங்கள் சார் அணுகுமுறையை, சமூகக் கட்டமைப்புகள் மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்காமல் காலாவதியாகிவிட்டன. அதனால், புறச் சக்திகள், தமிழ் மக்கள் மத்தியில் நுழைவது இலகுவாகிவிட்டது. பொறுப்பின்மையையும் சுரண்டல் மனநிலையையும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து முற்றாக விலக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால், போதைப்பொருள் பாவனையால் மாத்திமல்ல, சமூக குற்றங்களாலும் தமிழ் சூழல் இன்னும் மோசமாக தள்ளாடத் தொடங்கிவிடும்.

போலி கௌரவங்களுக்காக தமிழ் மக்களை ஆக்கிரமித்துவிட்ட போதை, சமூக குற்றங்களை கண்டுகொள்ளாமல் மூடி மறைத்துச் செயற்படுவது, சமூக விரோதச் செயற்பாடாகும். அவ்வாறான நிலையை தமிழ்த் தேசியத்துக்குள் இயங்கும் பல தரப்புகளும் தற்போது செய்து வருகின்றன.

வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்கு, அரச கட்டமைப்பே காரணம் என்று குற்றஞ்சாட்டிவிட்டு விலகி ஓடுவது, சமூகப் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதாகும். அரச கட்டமைப்புகள் மாத்திரம் காரணமல்ல; மாறாக, அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தரப்புகள், தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

அந்தத் தரப்புகளை அடையாளப்படுத்தி, எச்சரிக்கை செய்வதுதான் தமிழ்த் தேசியத்துக்கான அர்ப்பணிப்பும் அறமும் ஆகும். ஏனெனில், தற்போது உயிரைக் கொடுத்து போராடுவதற்கு எந்தத் தமிழ்த் தலைவரும் தயார் இல்லை.

அப்படியான நிலையில், குறைந்த பட்சம் அறத்தினை காக்கும் அரசியலுக்காக, அவர்கள் சில நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதில், முக்கியமானது போதைக்கு எதிராக நிலை. இல்லையென்றால், கண் முன்னாலேயே தமிழ்ச் சமூகம் மோசமாகச் சீரழிந்து போகும். அப்போது, அவர்களை அழிக்க வேறு யாரும் தேவை இருக்காது. தாங்களாகவே அழிந்து போய்விடுவார்கள்.

## கடிதங்கள்

### வல்வெட்டித்துறை

### பொலிஸார் அசமந்தம்; மக்கள் பாதிப்பு

திருட்டு சந்தேக நபரை அடையாளம் காட்டிக் கொடுத்தும், இதுவரை கைது செய்யாமல் இழுத்தடிப்பு செய்யும் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில், பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், இரண்டு திருட்டு சம்பவங்களும் ஒரு வழிப்பறி கொள்ளைச் சம்பவம் இந்த மாதம் இடம்பெற்றுள்ளன. ஆனால், முறைப்பாடு பதிவு செய்தும், சந்தேக நபர்களை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொற்றாவத்தை பகுதியில், இரண்டு வீடுகளுக்குள் புகுந்து தங்க நகைகள் திருடப்பட்டன. பாதிக்கப்பட்ட நபர்கள், 15 பவுன் தங்க நகைகளை இழந்துள்ளனர். முறைப்பாடுகள் பதிவு செய்தும், பொலிஸார் வீடுகளுக்கு வந்து விசாரணை நடத்தவில்லை.

அத்துடன், கொற்றவத்தை பூமகள் சன சமூக நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்ற வழிப்பறி கொள்ளைச் சம்பவம் தொடர்பில், சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டு, பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும், எவரும் கைது செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தேநபர் சி.சி.டி.வி காட்சிகள் ஊடாக அடையாளம் காணப்பட்டு, தெரியப்படுத்திய நிலையில், வல்வெட்டித்துறை பொலிஸார், சந்தேக நபரை எங்காவது கண்டால், பிடித்துக் கொண்டு வந்து பொலிஸில் தருமாறு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கூறியுள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸாரின் இவ்விதமான கடமை தவறிய நடவடிக்கைகளால், நகைகளைப் பறி கொடுத்த நபர்கள் அதிருப்தியும் மனவிரக்தியும் அடைந்துள்ளார்கள்.

– செந்தூரன் பிரதீபன்




# எமது வாழ்வும் கலைந்து போனது

எம்.றொசாந்த்

**ஒக்டோபர் 15ஆம் திகதி, வெண்பிரம்பு பாதுகாப்பு தினமாகும். அதனால், பார்வையற்றவர்கள் தொடர்பிலான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமான செயற்றிட்டங்களை முன்னெடுங்கள் என வன்னி மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் பேரம்பலம் ஞானக்குமார் மற்றும் செயலாளர் கிருஷ்ணன் மைந்தகுமார் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (12) புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு மேற்கண்டவாறு தெரிவித்தனர். அங்கு அவ்விருவரும் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

வெண்பிரம்பை தாங்கியவர் வீதியில் எந்த பகுதியிலும் கடக்கலாம். அவர்களுக்கு இதுதான் பாதசாரி கடவை என்பதனை அறிந்து கொள்ள முடியாது. வெளிநாடுகளில் வீதிகளில் பார்வையற்றவர்களும் வீதி குறியீடுகளை அறிந்து கொள்ளக் கூடிவாறான நிலைமை உண்டு. ஆனால் இலங்கையில் ஒருசில நகரங்களில் தவிர பெரும்பாலான இடங்களில் இல்லை. எனவே, வீதியில் வெண்பிரம்புடன் ஒருவரை கண்டால், வாகனத்தை அவதானமாகச் செலுத்துங்கள்.

வெண்பிரம்புடன் நிற்கும் ஒருவர் அதனை இரண்டாக மடித்து, கைகளை நீட்டினால் அவர் பாதையைக் கடக்கப் போகிறார் என அர்த்தம். அந்நேரத்தில் வீதியில் வாகனம் செலுத்துவோர், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்கள் வீதியில் கடக்க உதவ வேண்டும்.

அதேவேளை, வெண்பிரம்பினை நான்காக மடித்து, வீதியில் கையை நீட்டினால், அவர் போக்குவரத்து சாதனம் ஒன்றில் பயணிக்க விரும்புகின்றார் என அர்த்தம். அவ்வாறு ஒருவர் நின்றால், வாகனத்தில் ஏற்றி செல்ல கூடியவர்கள், அவரை வாகனத்தில் ஏற்றி சென்று அவர் கூறும் இடத்தில் இறக்கி விடலாம்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர், பார்வையற்றவர்களுக்கு கிளிநொச்சியில் கல்லூரி ஒன்று இருந்தது. அங்கு அவர்களுக்கு தொழில்நுட்பம் உள்ளிட்ட கற்கை நெறிகள் கற்பிக்கப்பட்டன.

ஆலமரத்தில் கூடுக்கட்டி வாழ்ந்த பறவைகள், ஆலமரம் சரித்தவுடன் வாழ்விடம் இன்றி கலைந்து போனது போல, யுத்தம் மெளனித்த பின்னர், எமது வாழ்வும் கலைந்து போனது.

யுத்தம் காரணமாக உடலில் அவயங்களை இழந்து, பார்வையிழந்து பெருங்காயங்களுக்கு உரிய சிகிச்சைகளை பெற முடியாது எம்மில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்கிறோம். நாமும், எமது தேவைகளை நாமே நிவர்த்தி செய்து, சாதாரணமானவர்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம்.

> **வாழ்வாதார உதவியென தற்காலிக நிவாரணத்தையே வழங்குகின்றார்கள். வாழ்வாதார உதவி என்பது, நீடித்து நிலைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியவாறு செயற்படுத்தப்பட வேண்டும்**

மாற்று திறனாளிகளுக்கு சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக மாதாந்தம் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் பணம் கூட, எமக்கு இந்த முறை வழங்கப்படவில்லை.

பார்வையற்றோர் தமது வாழ்வினை தாமே கொண்டு நடத்த கூடிய நிலைமையினை ஏற்படுத்தவே வன்னி விழிப்புலன் அற்றவர்கள் சங்கம் உழைத்து வருகின்றது. அதற்காக புலம்பெயர் உறவுகளும் தாயக உறவுகளும் எமக்கு உறுதுணையாக உள்ளனர்.

## தற்காலிக நிவாரணமே தருகிறார்கள்

வாழ்வாதாரம் என்பது ஒருவர் தனது வாழ்க்கையை முழுவதுமாக கொண்டு நடத்துவதற்கு உதவி செய்வது ஆகும். ஆனால், இங்கே சிலர் வாழ்வாதார உதவியென தற்காலிக நிவாரணத்தையே கொடுக்கின்றார்கள்.

உதாரணமாக, ஒருவருக்கு வாழ்வாதார உதவியென ஒரு பசுமாட்டை வாங்கி கொடுத்தல், அந்த பசுமாடு கறக்கும் பால் மட்டுமே, அவர்களின் வருமானத்தில் பங்கு வகிக்கின்றது. மாடு பால் கறக்காத போது, அவர்கள் வருமானத்துக்கு என்ன செய்வார்கள்? வருமானமின்றி அந்த மாட்டினை தொடர்ந்து பராமரிக்க முடியாது அதனை விற்று விடுவார்கள். உடனே தாம் வாழ்வாதார உதவியாக வழங்கிய மாட்டினை விற்று விட்டார்கள் என குறை கூறுவார்கள்.

இதுவே தற்போது நடைபெற்று வருகின்றது. இவர்கள் வாழ்வாதார உதவியென தற்காலிக நிவாரணத்தையே வழங்குகின்றார்கள். வாழ்வாதார உதவி என்பது, நீடித்து நிலைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியவாறு செயற்படுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக, தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு, அங்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கான தொழில்களை வழங்குவதன் ஊடாக, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

## நிரந்தர வைப்பு

எமது சங்கத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 278 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் யுத்தம் மற்றும் விபத்துகள் காரணமாக கண் பார்வையை இழந்தவர்கள். இவர்களில் 68 பேர் முற்றாக பார்வை இழந்தவர்கள். ஏனையோர் பார்வை குறைபாடு உடையவர்கள்; ஒற்றை கண் பார்வை உடையவர்கள் என உள்ளனர்.

எமக்கு வங்கிகள் கடன் தர மறுக்கின்றார்கள். கண் பார்வை இல்லாமல் எவ்வாறு தொழில் செய்து கடனை கட்ட போறீர்கள் என கேட்டு கடன் தர மறுக்கின்றார்கள்.

தொழில் வழங்குநர்கள் எமக்கு தொழில் தர மறுக்கின்றார்கள். அதற்கு இன்னுமொரு காரணம் நாம், விடுதலைப்புலிகளின் நவம் அறிவுக் கூடத்தில் பயின்றமையால் எம்மை தொழிலில் இணைத்தால், தமக்கு எதாவது பிரச்சினைகள் வரலாம் என அஞ்சுகின்றார்கள்.

இவ்வாறான சூழலில், நிரந்தரமாக பார்வையற்றவர்களால் எவ்வித தொழிலும் செய்ய முடியாத காரணத்தால், அவர்களின் வாழ்வாதாரமாக அவர்களின் வங்கி கணக்கில் ஒரு தொகையை நிரந்தர வைப்பாக வைப்பில் இடும் போது, அதன் மூலம் கிடைக்கும் வட்டி அவர்களின் வருமானமாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளை செய்யும் முயற்சியில் தற்போது நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

## தொழில் வாய்ப்பு இல்லை

நவம் அறிவுக் கூடத்தில் எமக்கு அவுஸ்திரேலியாவில் இருந்து ஆசிரியர்கள் வந்து கற்பித்தனர். அவர்களிடம் நாம் கற்றுத் தேர்ந்தோம். அதன் அடிப்படையில் பார்வையற்றோருக்கான தொழில்நுட்ப கல்லூரியை ஆரம்பித்து, கணினி சம்பந்தமான கற்கை நெறிகளை கற்பித்தோம்.

க.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்து பல்கலைக்கழகம் செல்லவுள்ளோர், பல்கலைக்கழக கல்வியை கற்று முடித்து தொழில் வாய்ப்புக்காக காத்திருப்போர், மற்றும் ஏனையவர்கள் என மூன்று பிரிவுகளாக பிரித்து அவர்களுக்கு 6 மாத கால கற்கை நெறியினை கற்பித்தோம்.

கணினியை கற்கும் போது விசைப்பலகை (கீ - போர்ட்) கைக்கு படிமனாக வந்து விடும். அதன் பின்னர் திரையில் உள்ளதனை வாசித்து, ஒலி வடிவில் கூற கூடிய மென் பொருட்கள் உள்ளன. அதன் ஊடாக நாம் தட்டச்சு செய்ய முடியும்.

எங்களால் வேகமாக எழுத்துப் பிழைகள் இன்றி தட்டச்சு செய்ய முடியும். நாம் நினைப்பதை அல்லது எமக்கு சொல்வதை தட்டச்சு செய்ய முடியும். ஆனால், ஒரு கடிதத்தை தந்து அதனை தட்டச்சு செய்து தருமாறு கோரினால் எம்மால் அதனை வாசிக்க முடியாது. ஆனாலும் ஒருவர் எமக்கு அருகில் இருந்து வாசித்தால் நாம் தட்டச்சு செய்வோம். புத்தங்கள் கடிதங்களை தட்டச்சு செய்வதற்கு எமது பார்வை உள்ள ஒருவரின் உதவி தேவை என்பதால் எமக்கு அந்த வேலைகளை பெற்று கொள்ள முடியவில்லை.

## தொழிலில் ஏமாற்றுகிறார்கள்

எமது வாழ்வாதாரமாக பண்ணை ஒன்றினை அமைத்தோம். அங்கு வேலை செய்வதற்கு பார்வையற்றவர்களான எம்மால் முடியாது. அதனால் பார்வை உள்ளவரை வேலைக்கு அமர்த்தினோம். அவருக்கு மாதாந்தம் 30 ஆயிரம் வரை சம்பளமும் கொடுத்தோம்.

அவர் ஒழுங்காக வேலை செய்கிறாரா? என்பதனை எங்களால் அறிய முடியாது இருந்தமையால் அவர் எங்களை ஏமாற்றி விட்டார்.

தற்போது நாம் ஒரு எண்ணெய் ஆலையை நடத்தி வருகிறோம். அங்கும் பணியாளராக பார்வை உள்ள ஒருத்தரே உள்ளார். அவரை வைத்தே ஆலையை இயக்கி வருகிறோம்.

பார்வை அற்றவர்கள் இவ்வாறான தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது, பற்றோடு வேலை செய்யக் கூடிய பார்வை உள்ளவர்களை நாம் எதிர்பார்க்கின்றோம் என்றனர்.



மத்திய பிரதேசம்

# குழாயில் வந்த கள்ளச் சாராயம்

மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள சன்சோடா கிராமத்தில் கள்ளச்சாராயம் விற்பனை நடைபெறுவதாகப் பொலிஸாருக்கு அண்மையில் இரகசியத் தகவல் வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதிக்குப் பொலிஸார் சென்றபோது, அங்கு குழாய் ஒன்றில் தண்ணீருக்குப் பதிலாகக் கள்ளச்சாராயம் வருவதை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

முதலில் அக்குழாயில் சுத்தமான நீர் வருவதாக நினைத்த பொலிஸாருக்குப் பின்னர் அது கள்ளச்சாரயம் என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நிலத்தை தோண்டி பார்த்தபோது, 7 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த தாங்கியில் சாராயத்தை பதுக்கி வைத்து, தேவைப்படும்போது பொலித்தீன் பைகளில் விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சீனா

# இந்தியாவுடன் கைகோர்த்த சீனா



சீனாவைச் சேர்ந்த பிரபல மின்சாரக் கார் தயாரிப்பு நிறுவனமான ‘BYD’, Atto 3 என்ற காரை இந்தியாவில் அறிமுகம் செய்யவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் சீனாவில் இருந்து பாகங்களை இறக்குமதி செய்து, சென்னையில் உள்ள தொழிற்சாலையில் வைத்து குறித்த கார்களை தயாரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ‘சுமார் 15,000 கார்களை அடுத்த ஆண்டில் விற்பனை செய்யவுள்ளதாகவும், இக்காரின் விலை இந்திய மதிப்பில் 25 இலட்சம் ரூபாய் முதல் 30 இலட்சம் ரூபாய் வரை நிர்ணயிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயநாடு

# 142 ஆண்டுகளுக்கு பின் வெளியே வந்த பாம்பு



வயநாடு மாவட்டம், சுல்தான்பத்தேரி அருகே, பெம்பரமலை எனும் வனப்பகுதி உள்ளது. அங்கு சென்ற சிலர், அப்பகுதியில் இருந்த மண்ணை தோண்டிக் கொண்டிருந்த போது மண்ணுக்குள் இருந்து வித்தியாசமான பாம்பொன்று வெளியே வந்துள்ளது.

இதையடுத்து, அவர்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து அங்கு வந்த அதிகாரிகள் குறித்த பாம்மை பிடித்துள்ளனர்.

> **‘தங்க கவசவாலன்‘ என்ற அதிசய பாம்பு எனவும், இது 142 ஆண்டுகளுக்கு பின்னர் வனப்பகுதியில் மண்ணுக்குள் இருந்து வெளியே வந்துள்ளதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்**

இந்நிலையில், மண்ணுக்குள் இருந்து வந்த பாம்பு ‘தங்க கவசவாலன்‘ என்ற அதிசய பாம்பு எனவும், இது 142 ஆண்டுகளுக்கு பின்னர் வனப்பகுதியில் மண்ணுக்குள் இருந்து வெளியே வந்துள்ளதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இதுகுறித்து வனத்துறையினர் ஆய்வு நடத்தி வருவதாகவும், இவ் ஆய்வின் முடிவில் இப்பாம்பு குறித்த முழு விவரங்கள் தெரியவரும் எனவும் தெரிவித்துள்ளனர்.



கேரளா

# முதலைக்கு இறுதி அஞ்சலி செலுத்திய மக்கள்

கேரளாவின் காசர்கோடு பகுதியில், இறந்த முதலைக்கு, அப்பகுதி மக்கள் இறுதி அஞ்சலி செலுத்திய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் காசர்கோடு அனந்தபுர பத்மநாப சுவாமி கோவிலில் உள்ள குளத்தில் ‘பபியா’ என்ற முதலை 70 ஆண்டுகாலமாக வாழ்ந்து வந்துள்ளது.

இம்முதலையானது அக்கோவிலின் அனைத்து இடங்களிலும் சுற்றித் திரிந்துள்ளதாகவும் எனினும் இதுவரை யாரையும் தாக்கியது இல்லை எனவும் கூறப்படுகின்றது,

அத்துடன் இத்தனை ஆண்டுகளாகவும் பபியா கோவில் பிரசாதத்தை மாத்திரமே உண்டு வாழ்ந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக பபியா உடல் நலம் குன்றிக் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து மங்களூரு பிலிகுலா உயிரியல் பூங்காவின் கால்நடை மருத்துவர்களின் மேற்பார்வையில் அம்முதலைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் பபியா சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊர் மக்கள் அனைவரும் கூடி பபியாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இவ் இறுதி அஞ்சலியில் 1,000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




ஒடிசா

# ஒடிசாவில் முதன் முறையாக பி.:.பா

இந்தியாவில் முதன்முறையாக `FIFA U-17` மகளிர் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டித் தொடர், ஒடிசா மாநிலம், புவனேஸ்வரத்தில் நேற்று முன்தினம் (11) ஆரம்பமாகியது.

இந்தியா, அமெரிக்கா, ஜேர்மனி, ஸ்பெயின், கனடா உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்த அணிகள் இந்த உலகக் கோப்பை கால்பந்துப் போட்டித் தொடரில் பங்கேற்றுள்ளன.

அந்தவகையில், தலைநகர் புவனேஸ்வரத்தின் கலிங்கா மைதானத்தில், நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தொடக்க விழாவில் ஒடிசாவின் முதலமைச்சர் நவீன் பட்நாயக் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இப்போட்டித் தொடரானது ஒடிசா, கோவா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 30 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



முத்தரப்புத் தொடர்:

# பாகிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் நியூசிலாந்து வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மிஷெல் பிறேஸ்வெல் (2), மிற்செல் சான்ட்னெர் (2), இஷ் சோதி (1), டிம் சௌதிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 131 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, பின் அலெனின் 62 (42), டெவோன் கொன்வேயின் ஆட்டமிழக்காத 49 (46) ஓட்டங்களோடு 16.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மிஷெல் பிறேஸ்வெல் தெரிவானார்.

இந்நிலையில், இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.

தேசிய விளையாட்டு விழா சைக்கிளோட்டப் போட்டி:

# வென்ற கே.ஏ.எஸ்.என் பெரேரா, எம்.ஏ.டி மடோன்ஸா










கம்பஹாவில் கடந்த வாரயிறுதியில் 47ஆவது தேசிய போட்டிகள் ஆரம்பித்திருந்த நிலையில், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் கே.ஏ.எஸ்.என் பெரேரா வென்றதுடன், ஆண்களுக்கான போட்டியில் எம்.ஏ.டி மடோன்ஸா வென்றிருந்தார்.

30 வீராங்கனைகள் பங்கேற்ற இப்போட்டியில் இரண்டாமிடத்தை டபிள்யூ.ஏ ஆகாஷா சடமினி பெற்றதோடு, மூன்றாமிடத்தை உதேஷினி என். குமரசிங்க பெற்றிருந்தார்.

178 வீரர்கள் பங்கேற்ற ஆண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தை ஆர்.டி.சி தயானந்த பெற்றதோடு, மூன்றாமிடத்தை டி.எஸ். நுகேர பெற்றிருந்தார்.

இப்போட்டிகளை இளைஞர், விளையாட்டமைச்சும், நெஸ்லேயின் நெஸ்டமோல்டும் இணைந்து ஒழுங்கமைத்திருந்தன.

# பயிற்சிப் போட்டியில் வென்ற இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், மெல்பேணில் நேற்று நடைபெற்ற சிம்பாப்வேயுடனான போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

இலங்கை: 188/5 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 54 (29), வனிடு ஹஸரங்க ஆ.இ 37 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: சிகண்டர் ராசா 1/8 [2], றயான் பேர்ள் 1/13 [2], மில்டன் ஷும்பா 1/7 [1], வெஸ்லே மட்ஹெவெரே 1/8 [1])

சிம்பாப்வே: 155/5 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: வெஸ்லே மட்ஹெவெரே 42 (42), மில்டன் ஷும்பா 32 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: தனஞ்சய டி சில்வா 1/5 [1], வனிடு ஹஸரங்க 0/22 [4], டில்ஷான் மதுஷங்க 0/25 [4])

மாகாண விளையாட்டுப் போட்டியில் முதன்முறையாக தங்கம்:

# காத்தான்குடி பத்ரிய்யா மாணவி மிஷ்ரத் சீமாவுக்கு வரவேற்பு

எம்.எஸ்.எம். நூர்தீன்

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் முதன்முறையாக காத்தான்குடி பத்ரிய்யா வித்தியாலயத்தின் மிஷ்ரத் சீமா எனும் மாணவி குண்டு எறிதலில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குகு தெரிவு செய்யப்பட்டமையை கௌரவித்து இந்த மாணவியை வரவேற்கும் நிகழ்வானது, அம்மாணவி கல்வி கற்கும் புதிய காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த மாணவியை திறந்த



வாகனத்தில் ஏற்றி பாடசாலை மாணவர்கள் புடை சூழ காத்தான்குடி பத்ரியா வீதி, காத்தான்குடி பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்று வரவேற்பளித்தனர்.

மியன்மார்

# ஆங் சான் சூகிக்கு 26 ஆண்டுகள் சிறை



மியான்மரின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகிக்கு மேலும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியவரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கூட்டணி, 2020ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது.

எனினும், இத் தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறி, ஆங் சாங் சூகியின் ஆட்சியைக் கவிழ்த்த இராணுவம், மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. இதனையடுத்து 76 வயதான ஆங் சான் சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

அதேசமயம் இராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டியமை, கொரோனா விதிகளை, சட்டங்களை மீறியமை, ஊழல் உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன.

இது தொடர்பான விசாரணை மியான்மர் நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் கிளர்ச்சியை தூண்டியமை, கொரோனா விதிகளை மீறியமை ஆகிய வழக்குகளில் சூகிக்கு சுமார் 23 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில்,தற்போது மீண்டும் ஓர் ஊழல் வழக்கில் ஆங் சான் சூகிக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மியான்மர் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனையடுத்து சுமார் 26 ஆண்டுகள் சூகி சிறைத் தண்டனையை அனுபவிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டுபாய்





## டுபாயில் பறந்த சீனாவின் கார்

சீனாவின் எக்ஸ்பெங் ( Xpeng) என்ற மின்சாரக் கார்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று தற்போது பறக்கும் கார்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

அந்தவகையில் 'எக்ஸ்2' (X2) என்ற பெயரிடப்பட்ட 2 பேர் அமர்ந்து செல்ல கூடிய பறக்கும் காரினை குறித்த நிறுவனம் முதன்முறையாக பொதுமக்கள் முன்னிலையில் டுபாய் நகரில் அறிமுகப்படுத்தியுள்ளது.


குறித்த காரில் ஒரு மூலைக்கு இரண்டு என மொத்தம் நான்கு மூலைகளிலும் எட்டு மின்சார இறக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது குறித்து எக்ஸ்பெங் நிறுவனத்தின் பொது மேலாளர் மின்குவான் கியூ கருத்துத் தெரிவிக்கையில், "சர்வதேச சந்தையில் இக்கார்களை அறிமுகப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளோம். இதற்காக டுபாயை நாங்கள் முதலில் தெரிவு செய்தோம்.

ஏனெனில், உலகில் புதுமையான நகராக டுபாய் உள்ளது. அடுத்த தலைமுறைக்கான பறக்கும் காருக்கான முக்கிய அடித்தளம் ஆக இச்சோதனை அமையும்" எனத் தெரிவித்துள்ளார்.

கனடா

## முழு நீள காற்சட்டைக்குள் 3 மலைப்பாம்புகள்; இளைஞர் கைது



கனடாவில் இருந்து மூன்று பர்மிய மலைப்பாம்புகளைத் தனது முழு நீளக் காற்சட்டைக்குள் வைத்து பஸ்ஸில் கடத்த முயன்ற இளைஞர் அமெரிக்க-கனேடிய எல்லையில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதான கால்வின் பாட்டிஸ்டா'என்ற இளைஞரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 250,000 டொலர் அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்மிய மலைப்பாம்புகள், மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று கருதப்படுவதால், அவற்றை இறக்குமதி செய்வது அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


மெட்டா

## பயங்கரவாத அமைப்பு பட்டியலில் 'மெட்டா'

ரஷ்யா அதிரடி

பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக்கை நிர்வாகிக்கும் 'மெட்டா' நிறுவனத்தைப் பயங்கரவாத மற்றும் தீவிரவாத அமைப்புகளின் பட்டியலில் ரஷ்யா சேர்த்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரேன் நாட்டவர்கள், ரஷ்யர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் பதிவிடும்




தகவல்களுக்கு பேஸ்புக் அனுமதி அளிப்பதே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

## பாடசாலை பஸ் மீது பயங்கரவாத தாக்குதல்

பாகிஸ்தானில் அண்மையில் 15க்கும் மேற்பட்ட மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தியதில், பஸ் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்நிலையில் இப்பயங்கரவாதத் தாக்குதலை கண்டித்து 2,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்



## நுளம்பு வலைகளால் இணையும் இந்தியா-பாகிஸ்தான்

இந்தியாவிடமிருந்து 60 இலட்சம் நுளம்பு வலைகளைக் கொள்வனவு செய்ய பாகிஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாதம் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மற்றும் மண்சரிவில் சிக்கி 1,700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இந்த அனர்த்தங்களால் மலேரியா போன்ற நோய் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு அதிகளவில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அந்தவகையில் இந்தியாவிடம் நுளம்பு வலைகளை வாங்கி பாகிஸ்தானுக்கு அனுப்பும் பணியை உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 13 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.